රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government

ඒකාබද්ධ සේවා අංශය | இணைந்த சேவைகள் பிரிவு | **COMBINED SERVICES DIVISION**

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. | சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. | Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතන தொலைபேசி:**(94) 011- 2694560** Telephone
ෆැක්ස් தொலைநகல்:**(94) 011- 2692254** Fax
ඊ-මේල් மின்னஞ்சல்:**dgcs@pubad.gov.lk** E-mail
වෙබ් අඩවිය இணையத்தளம்: **www.pubad.gov.lk** Web Site

මගේ අංකය எனது இல My No } CS/DOS/Policy/පොදු
ඔබේ අංකය உமது இல Your No }
දිනය திகதி: Date } 2023.08.25

அமைச்சின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்ட செயலாளர்கள்
பிரதேச செயலாளர்கள்

அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III இல் உள்ள உத்தியோகத்தர்களை தரம் II இற்கு தரமுயர்த்தல்

மேற்குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பில் எனது இணை இலக்கம் மற்றும் 2023.05.12 திகதிய கடிதத்துடன் இணையப் பெற்றது.

02. 2013 ஆம் ஆண்டில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்கள் மாத்திரம் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவையின் தரம் II ற்கு பதவியுயர்த்துவதற்காக விண்ணப்பிப்பதற்கு மேற்குறிப்பிடப்பட்ட கடிதத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள விண்ணப்பத்தினை பயன்படுத்த முடியும் என தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்தோடு, அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் யாப்பில் 14வது பந்தியின் பிரகாரம் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் IIIற்கு மற்றும் தரம் IIற்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களை, அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவையின் தரம் IIற்கு மற்றும் தரம் Iற்கு பதவியுர்த்துவதற்காக விண்ணப்பிக்கும் போது எனது இலக்கம் CS/DOS/අන්තර්ගුහණය மற்றும் 2020.07.20 திகதிய கடிதத்தின் ஊடாக அறிமுகப்படுத்தியுள்ள விண்ணப்பத்தை மாத்திரம் பயன்படுத்த வேண்டும் என மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

03. அதன்படி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவையின் தர பதவியுயர்வு தொடர்பில் விண்ணப்பிக்கும் போது சரியான மாதிரியில் முன்வைத்துள்ள விண்ணப்பத்தினை மாத்திரம் உங்களின் பரிந்துரையுடன் எனக்கு அனுப்பி வைக்குமாறு தயவுடன் தெரிவித்துக் கொள்வதோடு குறிப்பிட்ட விண்ணப்பத்தின் ஊடாக அனுப்பப்படாத விண்ணப்பப்படிவங்கள் மீண்டும் திருப்பி அனுப்பி வைக்கப்படும் என்பதை மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

04. இது தொடர்பில் உத்தியோகத்தர்களை அறிவுறுத்துவது பொருத்தமானதாகும்.

ஒப்பம்./ எஸ். ஆலோகபண்டார
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்